03.03.2026 OS.No.75/2022 PW2 Name :.தீபா

8ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு திருமணம் ஆகி 20 ஆண்டுகள் ஆகிறது. 19 வயதில் திருமணம் நடந்தது. என்னுடைய வயதை 35 என கூறியுள்ளதால் எனக்கு 16 வயதில் திருமணம் ஆகியுள்ளது என்றால் 2006ம் ஆண்டில் எனக்கு திருமணம் நடந்தது. மணிகண்டனுடன் திருமணத்திற்கு பின் அரப்பாண்டகுப்பத்தில் குடியிருந்தேன். இன்றைய தேதிவரை அங்குதான் குடியிருக்கிறேன். வழக்கு சொத்திற்கு பட்டா மட்டும் தான் உள்ளது.
2. வேறு ஆவணங்கள் இல்லை. அந்த பட்டா நடராஜ கவுண்டர், சாமிநாதன், தசரதன் ஆகியோர்கள் பெயரில் உள்ளது. அந்த மூன்று நபர்களுக்கு சொத்து அவர்களுடைய அப்பா மூலமாக பாத்தியபட்டது. அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. அந்த பட்டாவில் எத்தனை அயிட்ட சொத்து குறிப்பிடபட்டுள்ளது என்பது எனக்கு தெரியாது. சர்வே எண், விஸ்தீரணம் தெரியும் தற்போது நியாபகம் இல்லை. வழக்கு சொத்தின் சர்வே எண் தற்போது நியாபகம் இல்லை. விஸ்தீரணம் 400 சதுரடி ஆகும். அந்த சொத்து சம்மந்தமாக தான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.
3. 400 சதுரடி சொத்து சம்மந்தமாக ஆவணங்கள் பார்த்துள்ளேன். அதில் தான் நான் பாகம் கேட்டுள்ளேன் என்றால் இல்லை. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் 400 சதுரடி என்பது சரியாகும். அதில் மூன்றாக பிரித்து பாகம் கேட்டுள்ளேன். முதல் விசாரணை தயார் செய்யும்போது அந்த விவரத்தை தான் வழக்கறிஞரிடம் கூறினேன்.

மற்ற விவரங்களையும் வழக்கறிஞரிடம் கூறியுள்ளேன். நடராஜகவுண்டருக்கு சொந்தமான 50 செண்டில் 35 செண்டை விற்றுவிட்டார்.

4. மணிகண்டனுக்கும் சத்யா, மேனகா ஆகியோர்களுக்கும் அதில் பாகம் உள்ளது. அதை மறைத்து விற்றுள்ளார்கள். 1984ல் அவ்வாறு விற்றுள்ளார். அந்த சமயத்தில் நான் பிறக்கவில்லை. என் கணவர் 1980ல் பிறந்தார். 1984ல் என் கணவர் இளவராக தான் இருந்தார். மேஜரான பின்னர் என் கணவர் தனியாக வழக்கு போடவில்லை. வாய்மூலமாக 1998லிருந்து கேட்டு வருகிறார். 35 செண்ட் விற்றுள்ளதை செல்லாது என்பதற்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால் 400 சதுரடிக்கு தான் வழக்கு போட்டுள்ளேன்.

5. 1984ல் 400 சதுரடிக்கு பத்திரம் ஆகியுள்ளது. அதை 1998லிருந்து என் கணவர் வாய்மூலமாக கேட்டுகொண்டுதான் இருக்கிறார். 50 செண்டு நிலத்திற்கு நடராஜன் பெயரில் தனிபட்டா உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அதில் நடராஜகவுண்டர் பெயர் மட்டும் உள்ளதா என்றால் 50 செண்டிற்கு தனிபட்டா எதுவும் நடராஜகவுண்டர் பெயரில் இல்லை. கூட்டாகதான் உள்ளது. தசரதன் மனைவி பெயர் சின்னதாய் வழக்கில் அவரை தரப்பினராக சேர்க்கபடவில்லை.

6. 1 1/2 ஏக்கர் சொத்து முழுவதையும் வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சேர்த்துள்ளோம். அதில் மூன்று வீடுகள் உள்ளது. மூன்றும் மோல்டிங் வீடு ஆகும். ஒவ்வொரு வீடும் சுமார் 5 லட்சம் மதிப்பு பெறும். அந்த விவரத்தை வழக்கறிஞரிடம் கூறியுள்ளேன். வீடுகளின் மொத்த மதிப்பு ரூ.15 லட்சம் இருக்கும். வழக்கில் வீடுகள் தொடர்பான குறிப்புகள் இல்லை என்பதை தெரிந்துகொண்டேன்.

1 1/2 ஏக்கர் சொத்தின் மதிப்பு சுமார் 60,00,000/−திற்குள் இருக்கும். சண்முகத்திடம் 1300 சதுரடி சொத்தின் சுவாதீனம் உள்ளது என்றால் அவ்வாறு அவர் சுவாதீனத்தில் இல்லை. எனக்கு திருமணமான தேதியிலிருந்து சண்முகம் பிரச்சனை செய்து வருகிறார்.

7. 2022 வரை சண்முகத்தின்மீது தனிபட்ட வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. சண்முகம் சுவாதினத்தில் உள்ள சொத்திற்கு கிழக்கில் பால்ராஜூம், தெற்கிலும் பால்ராஜூம் மேற்கில் பரத்தும், வடக்கில் தார் ரோடும் உள்ளது. 2019 ஆண்டில் வழக்கு போடுவதற்காக ஆவணங்கள் எடுத்தபோதுதான் அந்த விவரம் தெரியும். திருமணமான நாள் முதல் அந்த விவரம் எனக்கு தெரியும்.

8. சண்முகம் தாக்கல் செய்த பதில் பற்றிய விவரம் தெரியும் ஆனால் அது உண்மைகிடையாது. 1 1/2 ஏக்கர் சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்யாமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மல்லிகா இந்த வழக்கிற்கு எனக்கு ஆதரவாக இல்லை. மல்லிகாவை தரப்பிரனாக வைத்து நான் பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 03/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.03 14:38:26 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.